## கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தின் கொடுக்கல் வாங்கல் அறிக்கை - 2018

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தின் 31 திசெம்பர் 2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முகாமைத்துவ நடவடிக்கை தொடர்பான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம்உறுப்புரைக்கிணங்க எனது அறிக்கை இந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்படும்.

### 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமையாளர் மற்றும் கட்டுப்பாட்டாளர் குழுவினுடைய பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனங்களும் மற்றும் அத்தகைய நிறுவனங்களுடன் தொடர்புடைய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். அதிகாரச் சட்டத்தின் 16 (2) பிரிவின் பிரகாரம், கணக்காய்வு செய்யப்பட்ட ஒவ்வொரு சொத்து தொடர்பான வருடாந்த நிதிநிலை அறிக்கைகளையும், குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த சொத்துக்களின் வருடாந்த செயல்திறன் அறிக்கைகளையும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனங்கள் தொடர்பாக வருடாந்த மற்றும் வேறு நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிககப்பட்டு சமர்ப்பிக்கப்படுதலை உறுதி செய்தல் வேண்டுமென்பதுடன் மேலதிகமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பாராளுமன்றத்துக்கு நிறுவனங்கள் பற்றிய வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

### 1.1.1 கணக்காய்விற்கு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 01/2004 இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம், அதிகாரபூர்வமான சபையின் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்கு இற்றைவரை சமாப்பிக்கப்படவில்லை.

### 2 முகாமைத்துவ செயற்பாடுகள்

### 2.1 கூட்டுத்தாபனம் தொடர்ந்து நிகழ்விலிருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2000 தொடக்கம் 2013 வரை கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டத்திற்குள்ளானதால் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 7,710,099,424 எதிர்மறையான பெறுமதியைக் காட்டியவாறு நிகர சொத்துக்கள் நலிவடைந்திருந்தன. 2014 ஆம் ஆண்டில் ஏற்பட்ட | ஏற்றுக்கொள்கின்றேன். | தேறிய சொத்துக்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

சொத்துக்களது மீள் மதிப்பீடு காரணமாக உருவாகிய மிகை ரூபா 5,780,204,145 ஆகும். இதன் காரணமாக, நிகர சொத்துக்களது எதிர்மறைப் பெறுமதியானது 2015 ஆம் ஆண்டில் ரூபா 2,764,039,908 வரை குறைவடைந்திருந்தன. கூட்டுத்தாபனத்தின் பொறுப்பில் திறைசேரியால் வழங்கப்பட்ட ரூபா 4,397,000,000 பெறுமதியான திறைசேரி பிணைமுறிகள் திறைசேரியினால் தீர்க்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் கூட்டுத்தாபனத்தின் மூலதனமாக மாற்றுப்பட்டதன் காரணமாக ரூபா. 1,388,648,519 பெறுமதியான நிகர சொத்துக்களாக மாற்றப்பட்டுள்ளன.

## 2.2 கணக்காய்வுச் சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசி | - | இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை களஞ்சியசாலைக்கு பெற்றுக்கொள்ளப்படும் போது பயன்படுத்த வேண்டிய ‘‘வழங்கல் பதிவு மற்றும் மொத்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள்’’ DNSA சான்றுகள் 722 கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து ‘‘வழங்கல் சான்றிதல் மற்றும் மொத்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள்’’ கவனமாக பேணப்பட வேண்டும். |
| சொத்து வரி வாடகை | - | கூட்டு:த்தாபனத்தின் 08, 09 ஆவது மாடியின் செயற்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பாக கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக் கொடுக்கப்படும் வசதிகள் மற்றும் சேவையில் ஈடுபடுத்தப்படும் ஊழியர்கள் தொடர்பான தகவல்கள் கோரப்பட்ட 26 மார்ச் 2019 ஆம் திகதிய கடித இலக்கம் TCM/C/CWE/INFO/2019/12 இற்கான பதில் 31 திசெம்பர் 2019 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்விற்கு தகவல்கள் சம்ர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசி - | களஞ்சியசாலைக்கு அரிசியினை பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய DNSA பற்றுச்சீட்டு (CWE 404) இன் மூலப்பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 62 சந்தாப்பங்களில் கிலோ கிராம் 1,610,850 அரிசிக்கான DNSA பற்றுச்சீட்டின் நிழல் பிரதி மாத்திரமே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்விற்கு மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1991 இன் 31 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 2.2 (அ) ஆம் பிரிவு | தாபனத்தின் நிதி முதலீடு செய்யப்படுகையில் தற்போதுள்ள பொதுக் கம்பனிகளில் மாத்திரமே செய்யப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணான வகையில் ரூபா 10 பெறுமதியான பெயரளவு முதலீடு மேற்கொள்ளப்பட்டு “வரையறுக்கப்பட்ட சதொச பொருளாதார நிலைய சேவைகள் தனியார் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட நிர்மாண மற்றும் பொறியியல் தனியார் கம்பனி”எனும் பெயர்களில் 02 அரச கம்பனிகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்திற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் | | | |
| | (i) நி.ஓ 137 மற்றும்138 | கொடுப்பனவுகள் தொடர்பான கொடுப்பனவு உறுதிகளை அதிகார பூர்வமான உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டிய | குறிப்பு இலக்கம் TCM/C/CWE/2018/AQ/10 மற்றும்TCM/C/CWE/2018/AQ/08 உரிய கணக்காய்வு விசாரணைகளுடன் | நிதி ஒழுங்கு விதிக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் 32 சந்தர்ப்பங்களில் ரூபா 6,938,866 பெறுமதியான கொடுப்பனவு சீட்டுக்கள் தொடர்பான கொடுப்பனவு சான்றுறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 28 சந்தர்ப்பங்களில் ரூபா 40,757,032 பெறுமதியான பற்றுச்சீட்டுக்கள் கொடுப்பனவின் போது அதிகாரபூர்வ உத்தியோகத்தரின் அனுமதியின்றி கொடுப்பனவு செய்ய்ப்பட்டிருந்தது. | தொடர்பான உங்களால் அனுப்பப்பட்ட பரிந்துரைகளுக்கமைய கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்கள் தொடர்பான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் போது அதிகாரபூர்வ உத்தியோகத்தரினால் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டினை அனுமதி வழங்குபட்டு மற்றும் சான்றுறுதிப்படுத்தப்படாத 32 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் அவற்றை மீண்டும் உத்தியோகத்தரினால் அனுமதியளிக்கப்பட்டு சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தன என உங்களிற்கு தயவுடன் அறியத்தருகின்றேன். மேலும் 28 சந்தாப்பங்களில் அதிகார பூர்வமாக உத்தியோகத்தரின் அனுமதியின்றி கொடுப்பனவு செய்யப்பட்ட கோடுப்பனவு பற்றுச்சீட்டுக்கள் மீண்டும் அனுமதி பெறப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றேன். | |
| (ii) நி.ஒ 189 | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி பெற்றுக்கொண்ட நிறுவனத்தினால் எதிர்வரும் திகதியிடப்பட்ட ரூபா 478,700,000 பெறுமதியான 23 காசோலைகள் வழங்கப்பட்டதுடன் அக்காசோலைகள் மறுக்கப்பட்டது. எனினும் கூட்டுறவினால் அக்காசோலை தொடர்பாக இவ் நிதி ஒழுங்கு முறைக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மறுக்கப்பட்ட காசோலைக்குப் பதிலாக முற்திகதியிடப்பட்ட காசோலைகளைப் பெற்றுக்கொண்டு மீண்டும் மீண்டும் அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட நிறுவனத்தினால் வுழங்கப்பட்ட காசோலைகள் மறுக்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கிளையினால் அது குறித்து தெரிவித்த வங்கி ஆணையினை மட்டும் பெற்றுக்கொள்ளுமாறு விநியோக பிரிவிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 21 ஓக்டோபர் 2019 இல் நடாத்தப்பட்ட வாழ்வாதார செலவுகள் குழுவினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட ஆலோசனைக்கு இணங்க ரூபா.570 மிலிலயன் பெறமதியான முற்திகதியிடப்பட்ட 21 காசோலைகள் நிதிக்கிளையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் | நிதி ஒழுங்கு விதிக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அவைகளும் தற்போது காசோலைகள் மறுக்கப்பட்டிருந்தது இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்காக மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பான தகவல்கள் உரிய பிரிவிற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. | |
| (iii) நி.ஒ 189 (எ) | மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக மீண்டும் காசினைப் பெற்றுக்கொள்ளும் போது வங்கி ஆணை அல்லது காசாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனையின் போது கூட்டுத்தாபனம் அதற்கு முரணாக மீண்டும் மீண்டும் மறுக்கப்பட்ட காசோலைகளுக்காக மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. | மறுக்கப்பட்ட காசோலைகளுக்கு பதிலாக வங்கி ஆணையினை பெற்றுக் கொள்ளவும் மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக நிறுவனத்திகால் ஏற்பட்ட வங்கிக்கான கொடுப்பனவுகள் தொடர்பாகவும் தெரிவிக்கப்பட்டு விநியோகப்பிரிவிற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும் கூட்டுத்தாபனத்திகால் மீண்டும் மீண்டும் காசோலைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்டதுடன் வங்கியில் வைப்பிலிடுவதற்காக காசோலைகள் அனுப்பப்பட்டிருந்தது. | நிதி ஒழுங்கு விதிக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) நி.ஒ 371 | முற்பணமானது செலுத்தபடபட்டிருக்க வேண்டும் இவ் வேலைகள் நிறைவேற்றப்பட்டவுடன் எனினும் கூட்டுத்தாபனம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 08 சந்தர்ப்பங்களுக்காக வழங்கப்பட்ட முற்பணமான ரூபா 258,940 பெறுமதியினைமேற்குறிப்பிட்டவாறு தீர்வு செய்வதற்கு எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்கு விதி 371 இற்கு இணங்க பெற்றுக்கொடுக்கப்படும் முற்பணம் உரிய வேலை முடிந்ததும் கொடுக்கப்பட வேண்டும் எனினும் இவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்கள் சில 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றிருந்தது என்பதனை ஏற்றுக்கொள்வதுடன் அது தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கையாக முற்பணமானது தீர்வு செய்யப்பட வேண்டும். | நிதி ஒழுங்கு விதிக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) நி.ஒ 395 (ஆ) | வங்கிக் கணக்கிணக்கக்கூற்றானது அடுத்த மாதத்தின் 15 ஆம் | எதிர்வரும் ஆண்டினுள் நிதி ஒழுங்கு விதி 395 இற்கமைய தயாரிக்கப்படும் | நிதி ஒழுங்கு விதிக்கமைய நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் கூட்டுத்தாபனத்தின் 08 வங்கிக்கணக்குகள் அதற்கமைய செயற்பட்டிருக்கவில்லை. | என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். | எடுக்கப்பட வேண்டும். |

**2.4 நிதி முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் சனவரி மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரையிலான காலத்தினுடைய அரச நிறுவனமொன்றிற்கும் தனியார் நிறுவனமொன்றுக்கும் ஒப்பந்தம் ஏதுமின்றி பயணிகள் சேவை வழங்குவது தொடர்பாக பெறுமதிகள் முறையே ரூபா 30,470,718 மற்றும் ரூபா.134,477,717 பெறுமதியான விலைப்பட்டியல் அனுப்பப்பட்டிருந்ததுடன் அது தொடர்பானஎந்தவித கொடுப்பனவும் 2018 ஆம் ஆண்டிற்குள் பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன் முன்னைய வருடத்திலிருந்து தொடர்ந்த பெறுமதிகளின் முறையே ரூபா 134,948,620 மற்றும் ரூபா 43,552,838 பெறுமதியான நிலுவைகளுடன் மேலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் பெறவேண்டிய மொத்தத் தொகைகள் முறையே ரூபா 139,645,373 மற்றும் ரூபா 153,111,472 ஆகும். | கணக்கீட்டு முறைமைக்கமைய இந்த தரவுகள் 31 திசெம்பர் 2018 இல் சரியானதாகவே காணப்பட்டது. | பணத்தினை அறவிட்டுக்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சந்தையில் நிலவும் அரிசி விலையை கட்டுப்படுத்த வாழ்க்கை செலவு அமைச்சரவை துணைக்குழுவின் முடிவின்படி, கூட்டுத்தாபனத்தினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அரிசியை இறக்குமதி செய்ததுடன் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை தனியார் துறைக்கு கடனிற்கு விற்றதன் விளைவாக, 31 திசெம்பர் 2018 ஆம் ஆண்டின் படி 04 நிறுவனங்களின் ரூபா.1,100,517,995 பெறுமதியானது பெறப்பட வேண்டியிருந்தது. | 31 திசெம்பர் 2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணினிமயமாக்கப்பட்ட மற்றும் சீராக்கப்பட்ட கணக்குகளின் படி, தனியார் துறையினால் கொள்வனவு செய்யப்பட்ட இறக்குமதி செய்த அரிசிக்காக பெறப்பட வேண்டிய தொகை ரூபா.1,100,517,995 ஆகும். இருப்பினும், இந்த நிறுவனங்களிடமிருந்து தொடர்புடைய நிதியைப் | பணத்தினை அறவிட்டுக்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெற சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| (இ) | 2011 ஆம் ஆண்டில் ரூபா.1,000,000 ஆன கடன் தொகையை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு எந்தவிதமான ஒப்பந்தங்களும் மேற்கொள்ளாமல் குறுங்காலக் கடனாக வழங்கப்பட்டிருந்த போதிலும் கடன்தொகையையும் அதற்கான வட்டி வருமானத்தினை 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் மீள அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பணத்தினையும் மற்றும் வட்டியினை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | வாழ்க்கை செலவிற்கான உப குழுவின் தீர்மானத்திற்கிணங்க கூட்டுத்தாபனத்தினால் 2017 ஆகஸ்ட் 25 ஆம் திகதி தொடக்கம் 2018 ஏப்ரல் 18 ஆம் திகதி வரையான காலத்தினுள் இந்தியாவிலிருந்து அரிசி மெற்றித்தொன் 110,966 ஆனது இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக கூட்டுத்தாபனத்தினால் அரச வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக் கடன்தொகையானது ரூபா.7,525,575,423 ஆக காணப்பட்டதுடன் 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு மொத்த கடன் தொகையில் ரூபா 2,000,804,343 பெறுமதியும் மொத்த கடனுக்கான வட்டியாக ரூபா. 933,549,063 பெறுமதியும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி 2018 திசெம்பர் 31 ஆம் திகதியின் போது செலுத்தப்பட வேண்டிய கடன்தொகை மற்றும் கடன் தொகைக்கான வட்டி ரூபா.5,524,807,426 பெறுமதியாகும். இறக்குமதி செய்த அரிசியினை கொள்வனவு செய்யும் நிறுவனங்களினால் உரிய முறையில் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட அரிசிக்கான பெறுமதியானது செலுத்தப்படாமையினால் கூட்டுத்தாபனம் விரைவில் கடனை | 2018 திசெம்பர் 31 ஆம் திகதியின் போதும் அக்கடன் தொகையில் ரூபா.2,000,804,344 பெறுமதியானது செலுத்தப்பட்டிருந்ததுடன் கடனுக்கான வட்டியாக ரூபா.933,549,063 பெறுமதியானது செலுத்தப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு முடிவில் மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா.5,524,807,426 பெறுமதியாகும். 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் திறைசேரியிடமிருந்து பெறப்படவேண்டிய நட்டம் ரூபா.1,941,547,739 பெறுமதியானதாகும். இந் நிதி திறைசேரியினால் பெற்றுக்கொடுப்பதற்கு இணக்கம் தெரிவித்தது எனினும் 2020/2022 இன் இடைக்காலப் பாதீட்டில் திறைசேரியில் நிதியில்லாமையினால் அந்நிதியினை உரிய திகதியில் செலுத்தமுடியாது என்பதை தெரிவிக்கப்பட்டிருந்தது. | பணத்தினை அறவிட்டுக்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளச்செலுத்த முடியாமையினால் மேலதிக கடனுக்கான வட்டி பெறுமதி வங்கிக்கு செலுத்தவேண்டியுள்ளது. அத்துடன் வாழ்க்கைச் செலவுக்கான குழுவினால் பரிந்துரைக்கிணங்க கூட்டுத்தாபனத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதியினை விட குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டதானால் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வதற்காக திறைசேரியினால் கூட்டுத்தாபனத்திற்கு வழங்க வேண்டிய மொத்தத் தொகை ரூபா. 1,941,547,739 ஆகும். | | |
| (உ) | கூட்டுத்தாபனத்தினால் கடன் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியினை கொள்வனவு செய்த தனியார் நிறுவனமொன்று 2019 யூலை 10 ஆம திகதியில் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளில் நிலுவையாக ரூபா.1,235,950 பெறுமதி காணப்பட்டதெனினும் அவ்வாறு காணப்படுவதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இதன் கீழ் காட்டப்பட்டுள்ள கணக்குகளின் நிலுவைகள் இதுவரையிலும் சீராக்கம் செய்யப்படாது 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறுவனத்தின் ரூபா.1,235,950 பெறுமதியே நிலுவையாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | இந் நிலுவைகள் தொடர்பான சரியான தன்மையை உறுதிப்படுத்த விற்பனைப் பிரிவிலிருந்து பெறப்பட்டு சரியான கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |
| (ஊ) | வங்கிப் பிணையினை மட்டும் பெற்றுக்கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியினை கடன் அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. தனியார் நிறுவனம் தொடர்பாக அவ்வாறு செயற்படாமல் அரிசியினை கடனுக்கு விற்பனை செய்யப்பட்டதுடன் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 5,574,811 பெறுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | 2018 திசெம்பர் 31 ஆம் திகதியின் கணக்கீட்டு முறைமைக்கமைய இந் நிலுவையினானது சரியானதென உறுதிப்படுத்துகின்றேன். | பணத்தினை அறவிட்டுக்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | 2018 சனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் வங்கி கணக்குகளை பரிசீலனை செய்த போது கூட்டுத்தாபனத்தின் இரண்டு வங்கி கணக்குகளில் இனங்காணப்படாத வைப்புக்களாக ரூபா 10,741,529 பெறுமதியானது காணப்பட்டது. | இனங்காணப்படாத வைப்புக்கள் 2019 பெப்ரவரி 27 ஆம் திகதியில் இனங்காணப்பட்டு உரிய கணக்குகளில் வைக்கப்பட்டதுடன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் இனங்காணப்படாத வைப்புகள் எதுவும் காணப்படவில்லை. | வைப்புக்கள் என்ன என்பதை இனங்கண்டு உரிய கணக்குகளுடன் உப்பிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மீளாய்வாண்டில் கூட்டுத்தானத்திற்கு சொந்த கட்டடங்களின் குத்தகை பெறுமதி ரூபா.266,726,442 ஆகவுள்ள போதிலும் பற்றுச்சீட்டானது ரூபா.216,567,898 ஆன பெறுமதிக்கே பெற்றுக்கொள்ளப்படிருந்தததுடன் 31 திசெம்பர் 2018 இல் அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா.50,158,543 ஆக காணப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பணத்தினை அறவிட்டுக்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.5 இனங்காணப்பட்ட இழப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொருத்தமான சாத்தியக்கூற்று ஆய்வறிக்கையில்லாமல் முகாமைத்துவத்தினால் 2014 ஆம் ஆண்டு திசெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட ‘‘கிராம எழுச்சி, சதொச படிய’’ நடமாடுமட வாகன செயற்திட்டம் 2015 சனவரி மாதத்தில் இடைநிறுத்தப்பட்டதடன் அச் செயற்திட்டத்தினால் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 117,008,741 பெறுமதியாகும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து இழப்பை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இரண்டு களஞ்சியசாலைகளினூடாக இறக்குமதி செய்ய்ப்பட்ட அரிசியினை விற்பனையின் போது ஒரு நிறுவனத்திற்கு மாத்திரம் ஒரு கிலோகிராம் அரிசியின் விலையை ரூபா 01 இனால் குறைத்து 583000 கிலோகிராம் அரிசி வழங்கப்பட்டிருந்ததினால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 583,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. | வாழ்க்கை செலவிற்கான அமைச்சின் உப குழுவின் அனுமதியினூடாக இலங்கையின் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் இறக்குமதி செய்யப்பட்ட பொன்னி, சம்பா அரிசி விற்பனையின் போது ஒரு கிலோகிராமிற்கு ரூபா 01 விலை குறைத்து விற்பனை செய்வதற்கு எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க விற்பனை செய்யப்பட்டிருந்தது. | வாழ்க்கை செலவிற்கான அமைச்சின் உப குழுவின் அனுமதி பெறப்பட்டமைக்கான ஆதாரங்கள் காணப்படாமையினால் உரிய விலைக்கு விற்கப்பட வேண்டும். |
| (இ) | அரிசியானது களஞ்சிய சாலைக்கு வழங்கப்படும் போது பல்வேறு காரணங்களினால் 61,400 கிலோகிராம் அரிசி தொகைகள் அழிவடைந்திருந்தது என DNSA பரிசீலனையின் போது கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டிருந்தன. | கணக்காய்வு பரிசோதனையின் போது 61,400 கிலோகிராம் அரிசி அழிவடைந்தமைக்கான காரணங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன. | அரிசி பங்குகளுக்கு ஏற்படும் சேதத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

1.கொள்கலன்களில் பூச்சிகள் காணப்பட்டதாக கூறப்பட்டிருந்த போதிலும் அவ் அரிசிகளுக்கு புகையிடப்பட்டதன் பின்னா விற்பனை செய்யப்பட்டிருந்தது.

2.DNSA இலக்கம் 524,530,557,571 உள்ளடக்கிய DNSA 26 இன் கீழ் மொத்த களஞ்சியசாலைக்கு அரிசிகள் மொத்தமாக விநியோகிக்கப்பட்டதன் பிறகு விநியோகிக்கப்பட முடியாத நிலையிலுள்ள அரிசி 101 மூட்டைகள் விலங்குகளின் உணவாக விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பதிவு செய்யப்பட்ட கால்நடை உணவு தயாரிப்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது.

3.ஹிங்குரகொட அரிசி தொகுதிகள் வரை கொண்டு செல்லப்பட்ட லொரி விபத்திற்கு உட்பட்டதனால் அரிசி மொற்றிக்தொன் 23 இற்கு உரிய இழப்பீடு வரையறுக்கப்பட்ட கப்பல் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன.

4.கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்திற்கு இறக்குமதி வழங்குனர்களிடமிருந்து அரிசி அளவுகள் பெறப்படும் போது கப்பலில் கொண்டுவரப்பட்ட இறக்குமதி ஆணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அளவை விட குறைவாக பெறப்பட்ட அளவுகள் மதிப்பிடப்பட்டிருந்ததுடன்

| | | |
|---|---|---|
| | | அவற்றிக்கான இழப்பீட்டினை சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

**2.6 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 54,722,228 சொத்துக்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான நிதியை பெற்றுக்கொள்வதற்கோ அல்லது நிறுவனத்தின் பங்குகளைப் பெற்றுக்கொள்வதற்கோ முறையான உடன்பாட்டுக்கு 31 திசெம்பர் 2018 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்படவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பணம் அல்லது பங்குகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் 1999 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்றில் ரூபா 9,923,710 பெறுமதியான முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ் நிறுவனம் மீண்டும் மீண்டும் நட்டத்தில் இயங்கியமையினால் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை எந்தவிதமான இலாபப் பெறுவனவும் பெறப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பணம் அல்லது பங்குகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முதலீட்டை மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | வியாபார பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக 2006 ஆம் ஆண்டில் திறைசேரியினால் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 275,000,000 பெறுமதியான கடன் தொகையை மீளச் செலுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் கடன் தொகையினை மீளக்கொடுப்பதற்காக கூட்டுத்தாபனத்திற்கு தகமையை பெற்றுக்கொள்வதற்கு என்றால் கூட்டுத்தாபனத்தினால் இலாபம் பெறும் வியாபாரத்தில் மட்டுமே முதலீடு செய்யவேண்டும். அரசாங்கத்தின் தேவைப்பாடு கருதி நடாத்தப்படும் அனைத்து திட்டங்களும் கூட்டுத்தாபனத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தக் கூடியவைகள் மக்கள் நலன்கருதி நடாத்தப்படுபவை | பணத்தை திருப்பிச் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | ஆகையால் கூட்டுத்தாபனத்தினால் கடனை மீளசெலுத்துவதற்கான தகுதியற்று 2017/2018 இல் தொடங்கப்பட்ட திட்டங்களுக்கான நட்டம் திறைசேரியினால் இற்றைவரையும் மீள பெற்றிருக்கவில்லை என்பதை அறியத்தருகின்றேன். | |
| (ஈ) | 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட ''கிராமிய எழுச்சி சதொச படிய'' திட்டத்தின் கீழ்கூட்டுத்தாபனத்தினால் குத்தகையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டு வழங்குனர்களுக்கிடையேபகிர்ந்து கொடுக்கப்பட்ட லொறியொன்றின்மொத்தத் தொகை ரூபா 1,456,368 பெறுமதியாகும். இச்செயற்திட்டம் நிறுத்தப்பட்டு 05 வருடங்களுக்கு மேலான போதிலும் இன்னும் கூட்டுத்தாபனத்தினால் மீளப்பெற்றிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | லொறியை மீண்டும் நிறுவனத்திற்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (உ) | மில்கோ செயற்திட்டம் 2018 சனவரி 31 இல் முடிவடைந்திருந்த போதிலும் முகாமைத்துவத்தினால் உரிய லொறியின் உரிமையாளருக்கு முன்னதாகவே தெரிவிக்காததினால் ஒப்பந்த அடிப்படையில் குளிரான களஞ்சிய வசதிகளுடன் கூடிய 03 லொறிகளுக்கு வாடகையாக ரூபா 416,000 பெறுமதியானது செலுத்தப்படவேண்டி ஏற்பட்டது. மேலும், 2017 திசெம்பர் மாதத்தில் ஒப்பந்தம் முடிவடைந்தஒரு லொறியினதும் 2018 ஆம் ஆண்டில் சனவரி மாதம் தொடர்பாகவும் ரூபா 112,000 பெறுமதியானது செலுத்தப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் இரண்டு மாதங்கள் பயன்படுத்தப்படாமல் மற்றும் அந்த லொறியினது குளிர்சாதன வசதிகளில்லாத போதிலும் ரூபா 224,000 பெறுமதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தின் அடிப்படையில் உரிய லொறிகளை பயன்பாட்டிலிருந்து நீக்குவது என்றால் ஒரு மாதத்திற்கு முன் அறிவிக்கப்படுதல் வேண்டும். இச் செயற்திட்டம் திடீரென நிறைவடைந்தமையினால் எந்தவொரு முன்னறிவித்தலும் வழங்கமுடியாமல் போனது என விநியோகப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனவே அக் காலப்குதியிலிருந்த நிதி முகாமையாளரினால் கொடுப்பனவினை செலுத்துமாறு அறிக்கப்பட்டது. | சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து இழப்பை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கூட்டுத்தாபனத்தினால் கடன் அடிப்படையில் அரிசியை விற்பனை செய்கின்ற போது தனியார் நிறுவனமொன்றுக்கு | 2018 திசெம்பர் 31 ஆம் திகதியின் கணக்கீட்டு முறைமைக்கமைய இந் நிலுவையினானது | சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து இழப்பை மீட்க நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 100,000,000 பெறுமதியானது இரண்டு வங்கி பிணைப் பத்திரம் பெற்றுக்கொண்டிருந்தது. எனினும் அவ் வங்கியினால் வழங்கப்பட்ட வங்கி பிணைப் பத்திரங்கள் சான்றுறுதிப்படுத்தப்படாமல் மீண்டும் மீண்டும் கடனை மீளச் செலுத்தாத போதிலும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனை செய்யப்பட்டிருந்தது. 31 திசெம்பர் 2018 ஆம் திகதியில் இந்த வங்கி பிணைபத்திரங்கள் போலியானது என அறியப்பட்ட அத்திகதியில் அந்த நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவேண்டிய தொகையானது ரூபா. 118,011,334 ஆகும். | சரியானதென உறுதிப்படுத்துகின்றேன். | எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | கூட்டுத்தாபனத்திடம் விநியோக சலுகைகள் பெறும் நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கிடையிலான ஒவ்வொரு விநியோக நிறுவனங்கள் தொடர்பாக போக்குவரத்தில் ஈடுபடும் தூரம் தொடர்பான உடன்பாடுகளுக்கு வராத கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவு பற்றுச்சீட்டு ரூபா 1,427,347 ஆன பெறுமதியினை உரிய நிறுவனத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | லொறி செல்லவேண்டிய பாதை மற்றும் அதன் தூரம் தொடர்பாக சரியான மதிப்பீட்டு வருவது நடைமுறைக்கு சாத்தியமற்றது. காரணம் ஒவ்வொரு லங்கா சதொச கூட்டுறவு சங்கத்தினால் தெரிவிக்கப்படும் கிளைகளுக்கிணங்க லொறிக்கான பயணம் தீர்மானிக்கப்படுகிறது. லங்கா சதொசாவுடன் கலந்துரையாடிய பின்னர், அவர்கள் தூரத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை எனறால் அது தொடர்பாக சதொச நிறுவனத்திற்கு அறிவுறுத்தி இணக்கத்திற்கு வந்து கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களிலிருந்து குறைத்துக்காட்ட தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டிலிருந்து இந்த முறையை செயல்படுத்த எதிர்பார்க்கிறோம் என்பதை அறியத்தருகின்றேன். | பொருத்தமானஉட் கட்டமைப்பு இனங்காட்டப்பட வேண்டும் |
| (ஏ) | அரச நிறுவன களஞ்சியசாலைகளிலிருந்து கூட்டுத்தாபனத்தின் லொறிகளில் பொருட்கள் ஏற்றப்படும் போது அது தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் காணப்படாமையினால் ஏற்படும் | இது தொடர்பான முறையான செயற்பாடுகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கையொன்று நிறுவனத்தின் தேவையான உரிய பிரிவுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன மற்றும் | சரியான உள்ளக கட்டுப்பாட்டு முறையை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் |

| | |
|---|---|
| பொருட்கள் இழப்பீடு காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு 2018 ஆம் ஆண்டில் ரூபா 534,775 பெறுமதியான இழப்பீடுகள் ஏற்பட்டுள்ளது. | இது தொடர்பாக பணிப்பாளர் குழுவினால் விசேடமான கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் பொருட்கள் இழப்பீடு தொடர்பாக ஊழியர்களின் பொறுப்பின் கீழ் காணப்பட்டால் அவற்றுக்கான இழப்பிட்டினை அவர்களின் சம்பளத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | **வரி சொத்து முகாமைத்துவம்** | | |
| (அ) | கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட சொத்துக்கள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த கூட்டுத்தாபனத்திற்கு குத்தகை செலுத்தப்படக்கூடிய சொத்துக்கள் தொடர்பான பரப்பளவுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் 2018 ஆம் ஆண்டிற்கான குத்தகை நடவடிக்கை தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருந்த பரப்பளவுகளுக்குமான தகவல் பரிசீலனையின் போது குத்தகைக்குட்படுத்தப்படாது பயன்படுத்தப்படாது காணப்பட்ட பரப்பளவு 280,515 சதுர அடியாக காணப்படுகின்றது. | பயன்படுத்தப்படாத இடத்தை குத்தகைக்கு விடப்படும் என அவ்வப்போது பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அதற்கு எந்தவிதமான பதில்களும் கிடைத்திருக்கவில்லை. | பயன்படுத்தப்படாத இடங்களை குத்தகைக்கு விடுவதற்கான ஒரு வழிமுறை உருவாக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மதிப்பீட்டு அறிக்கையில் காட்டப்பட்டுள்ள சந்கைப் பெறுமதியினை விட குறைந்த பெறுமதிக்கு கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஆதனங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டதால் மாதாந்தம் ஏற்றபட்ட நட்டம் ரூபா 1,869,156 பெறுமதியானதுடன் வருடாந்தம் ரூபா 22,429,875 பெறுமதியானது வருமான நட்டமாக காணப்படுகின்றது. | நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைக்காக தலைமைக் காரியாலயத்தில் 01 மற்றும் 02 மாடியினை குத்தகை அடிப்படையில் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அவ் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைக்கு ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாமையால் உரிய குத்தகை கட்டணத்தினை அறவிட முடியாமல் இருந்தது. சதொச நிறுவனத்தினுடைய உப | சந்தைப் பெறுமதிக்கமைய குத்தகைக்கு சொத்துக்கள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகமாக செயற்பட்டு வருகின்ற ‘‘சதொச பாதுகாப்பு மற்றும் பொது(தனியார்) நிறுவனம்’’ இலிருந்து உரிய அடிப்படையில் குத்தகை கட்டணத்தினை அறவிடுவதில் இதே போன்று பிரச்சினை நிலமை காணப்பட்டது. | |
| (இ) | கூட்டுத்தாபனத்தினால் குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்களைப் பயன்படுத்துகின்ற நிறுவனங்கள் மற்றும் 33 நபர்களிடமிருந்து (குத்தகைதாரர்) 2018 ஆம் ஆண்டிற்கான பல குத்தகைத் தவணைகளை முகாமைத்துவத்தினால் அறவிடப்பட்டிருக்காமையினால் கூட்டுத்தாபனத்தின் 31 திசெம்பர் 2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பெறப்பட வேண்டிய குத்தகை வருமானம் ரூபா 388,090 பெறுமதியாக காணப்படுகின்றது. | களஞ்சியசாலைகள் தொகுதியினுள் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த தனியார் கடைகளிடமிருந்து வாடகை கட்டணத்தினை அறவிடும் போது அவர்களினால் உரிய காலத்தில் கொடுப்பனவுகள் செய்யப்படாத சந்தர்ப்பங்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | குத்தகை கட்டணத்தினை சரியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 05 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தாபனத்தினால் குத்தகைக்கு விடப்பட்டிருந்த ஆதனத்தினால் மாதந்த தவணைக் கட்டணமாக ரூபா 904,347 பெறுமதியானது ஆதனங்களிற்கான 2018 ஆம் ஆண்டிற்கான எந்தவொரு தவணைக்கட்டணங்களும் முகாமைத்துவத்தினால் அறவிடப்பட்டிருக்காமையினால் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 8,975,350 பெறுமதியான குத்தகை வருமானமானது கூட்டுத்தாபனத்தினால் பெறப்படவேண்டியுள்ளது. | (ஈ) மறறும் (உ) சங்கராஜ மாவத்தையில் காணப்படும் களஞ்சியத்தொகுதியின் குத்தகைக்கட்டணம் செலுத்தப்படவில்லை ‘‘அசாட்சலி அறக்கட்டளை’’ இனால்அனைத்து நிலுவைகளும் அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 438,484 பெறுமதியான மேலதிக கட்டணம் (தண்டப்பணம்) மற்றும் தற்போது அறவிடப்பட வேண்டியிருந்தது. குத்தகைக்கட்டணம் செலுத்துவதில் தாமதித்த மற்றும் முற்திகதியிடப்பட்ட காசோலைகள் பெற்றுக்கொடுத்து ரூபா 1,155,358 ஆன தொகையினை செலுத்தாமல் மாலஹவத்தை களஞ்சியசாலையின் குத்தகை அடிப்படையில் இருந்த ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து பணம் மீளப்பெறப்பட்டிருந்தது. தற்போது அவ்விரு நிறுவனங்களும் அகற்றப்பட்டிருந்தது. | குத்தகை கட்டணம் முறையாக அறவிப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஒரு தனியார் நிறுவனம் மற்றும் ஒரு தனிநபரிடம் குத்தகைக்கு வழங்கப்பட்ட பெறுமதியினை விட குறைவான குத்தகை வாடகை செலுத்துவதனால் கூட்டுத்தாபனத்திற்கு மாதாந்தம் ரூபா 43,225 பெறமதியானது இழப்பீடாக காணப்படுவதுடன் மீளாய்வாண்டில் இதனால் ஏற்பட்ட வருமான குத்தகை இழப்பீடு ரூபா 301,975 ஆக காணப்படுகின்றது. | -மேற்குறிப்பிடப்பட்டதன் படி- | குத்தகை கட்டணம் முறையாக அறவிப்பட வேண்டும். |
| (ஊ) | சதொச மகா செயலகத்தின் 08 ஆவது மாடியில் குத்தகைக்கு கொடுக்கப்படகூடிய பரப்பளவு சதுர அடி அளவானது, கூட்டுத்தாபனத்தின் 2014 ஆம் ஆண்டில் சொத்து மதிப்பீட்ட அறிக்கையின் பிரகாரம் பரப்பளவு 9857 சதுரஅடியாகும். ஆதில் சதுர அடிக்கான சந்தைப்பெறுமதி ரூபா 80 ஆகும். இதை குத்தகைக்காக வழங்கினால் மாதந்தம் குத்தகைக்கட்டண வருமானமாக ரூபா. 788,560 பெறுமதியானதுடன் அதன் வருடாந்த பெறுமதி ரூபா 9,462,720 ஆக இனங்காணப்பட்டது. மேலும், இங்கு களப்பரிசோதனையின் போது அம்மாடியில் வெளிநிறுவனங்கள்/ஆட்கள் வேலையில் ஈடுபட்டிருந்தது அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான குத்தகைக்கட்டணம் கூட்டுத்தானபனத்திகால் பெறப்பட்டிருக்கவில்லை. 08 ஆவது மாடி தொடர்பான தகவல்கள் கோரப்பட்ட கடிதத்திற்கு (2019 மார்ச் 18 ஆம் திதியில் CM/CWE/INFO/2019/11 கடித) 2020 யூன் 25 ஆம் திகதி வரையிலும் பொதுமான மற்றும் உரிய பதில்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சதொச தலைமைக் காரியாலய கட்டிடத்தில் 08 ஆவது மாடியில் நீண்ட காலமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த மீள்குடியேற்ற திட்ட முகாமைத்துவ பிரிவு (IDPS) நிறுவனம் அமைச்சரவையினால் தீர்மானத்தின் அடிப்படையில் நிறுவப்பட சதொச நிறுவனத்திடம் காணப்பட்டது. ‘‘தொழில் மற்றும் வர்த்தகம் மற்றும் இடம்பெயர்ந்தோரின் நிரந்தர மீள்குடியேற்றம்’’ அமைச்சினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய 2018 ஆகஸ்ட் 31 இலிருந்து 2018 ஒக்டோபர் 25 வரை வாடகை செலுத்த முடியாமல் 2019 சனவரி 01 இலிருந்து 2019 செப்தெம்பர் 30 வரை மாதாந்தம் ரூபா 239,292 பெறுமதி குத்தகைக் கட்டணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. | குத்தகைக் கட்டணத்தினை முறையாக அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் ஆலோசனைக்கமைய 09 ஆவது மாடியில் காணப்படும் பரப்பளவு 4080 சதுரஅடி அளவுள்ள | கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலகத்தினால் 2017 பெப்ரவரி 27 மற்றும் 2017 ஒக்டோபர் 16 ஆம் திகதிய I&C/COM/2P/2/159 | சொத்துக்களை குத்தகைக்கு விடும் உரிமைஅக்குத்தகை உரிமையாளருக்குடையது என்பதுடன் |

| | | |
|---|---|---|
| இரண்டு வெளிநிறுவனங்களுக்கு வழங்கபட்டிந்தது என்பது தெரிக்கப்பட்டிருந்த போதிலும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலகத்தின் இலக்கம் I&C/COM/2P/2/159 உடைய 2017 பெப்ரவரி 27 ஆம் திதி கடிதத்திற்கமைய 942 சதுர அடி மட்டும் மேற்குறிப்பிட்ட நிறுவனத்திற்கு வழங்குமாறு கோரப்பட்டிருந்தது. இதன் படி, பரப்பளவு 3138 சதுர அடியானது அவ்வாறு அனுமதி பெறப்படாமல் வெளி நிறுவனத்திற்கு பெற்றுக்கொடுத்தீருந்தபடியால் கூட்டுமுத்தாபனத்திற்கு ஏற்பட்ட மாதாந்த இழப்பீட்டு குத்தகை வருமானப் பெறுமதி ரூபா 251,040ஆகவும் வருடாந்த இழப்பீட்டு குத்தகை வருமானப் பெறுமதி ரூபா 3,012,480 ஆக காணப்பட்டுள்ளது. | ஆம் கடிதத்தின் அறிவுறுத்தலின் படி குத்தகைக் கட்டணமில்லாமல ஐக்கிய நாடுகளின் தொழில்துறை மேம்பாட்டு அமைப்பு (UNIDO)அவர்களின் அலுவலக வேலைகளுக்காக நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. அந்நிறுவனம் மற்றும் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி 2020 ஒக்டோபர் 31 வரை இந்நிறுவனத்திற்கு காரியாலய நடவடிக்கை தொடர்பாக பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து, இது மீண்டும் 11 நவம்பர் 2019 திதியில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு 28 பெப்ரவரி 2021 வரை நீட்டிக்கப்பட்டது. | உரிய தீர்மானத்தை கூட்டத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.8 சர்சைக்குரிய கொடுப்பனவுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 26 ஆகஸ்ட் 2010 ஆம் திகதியில் பணிப்பாளர் சபையின் தீர்மான இலக்கம் 2010/1753/34 இன் பிரகாரம்,அப்பொழுது காணப்பட்ட கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரின் அனுமதியுடன் 2007 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்வகையில் ஒவ்வொரு மட்டத்திலும் வேலை மேற்பார்வை செய்வதற்கு மூன்று செயல் அதிகாரிகளை மேற்குறிப்பிட்ட செயல் பதவிகளில் நிரந்தரமாக அமர்த்துவதற்கு தீர்மானம் செய்யப்பட்டது. இருப்பினும், அதிகாரிகளின் தனிப்பட்ட கோப்புகளை ஆய்வு செய்யும் போது அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட கடிதங்களின் | பணிப்பாளர் சபையின் தீர்மான இலக்கம் 2010/1753/34 இன் பிரகாரம்,அப்போதைய கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரின் அனுமதியுடன் பதவி உயர்வு பெற்ற 03 அதிகாரிகளுக்கான நிலுவைத் சம்பளம் வழங்குவது குறித்து.<br>(i) கௌரவ அமைச்சரின் அனுமதியை பெற்றுக்கொள்வது தொடர்பாகஅப்போதைய தலைவரினால் 2020 செப்டம்பர் 01 ஆம் திகததியிட்ட சி.எச்/10 இலக்கமிடப்பட்ட கடிதத்தை சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ள்ப்பட்டது எனஅப்பொழுது இருந்த | கொடுப்பனவுகள் தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் தலைவா் மற்றும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அத்துடன் உண்மையாக அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என பரீட்சிக்கப்பட வேண்டும். |

மூலப்பிரதிகள் எதுவுமில்லை. மேலும், நிலுவைத் தொகை மற்றும் சம்பள அதிகரிப்புத் தொகை ரூபா. 11,511,088 ஆகது 2018 ஆம் ஆண்டில் அதாவது அத்தருனத்தில் காணப்பட்ட பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் 08 வருடங்களுக்கு பின்னா தற்போதைய கணிப்பாளர் சபையின் மற்றும் கூட்டுத்தாபன தலைவரின் அனுமதியின்றி கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன், அக்கொடுப்பனவு தொடர்பாக அதிகாரத்தினையும் அனுமதியினையும் பெற்றுக் கொடுத்த உத்தியோகத்தர்களுக்கிடையில் இக் கொடுப்பனவுகளை பெற்றுக்கொண்ட இரண்டு உத்தியோகத்தர்களாகும். அதேபோன்று இவ் உத்தியோகத்தர்கள் இருவருக்கும் அவர்கள் வேலை நிறுத்தம் செய்ய்ப்பட்டிருந்த காலப்பகுதியில் உரிய நிலுவசைச் சம்பள் மற்றும் சம்பள ஏற்றம் அடிப்படையில் பணிப்பாளர் சபை மற்றும் கூட்டுத்தாபனத் தலைவரின் அனுமதியின்றி அவ்வப்போது ரூபா. 3,718,552 இனை 2018 ஆம் ஆண்டினுள் இணைய வங்கி முறை மூலம் பெறப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவுகளை அவ் இரண்டு அதிகாரிகளுமே அங்கீகரித்த மற்றும் அனுமதியளித்திருந்தனர்.

நிதி முகாமையாளரினால் ‘‘சான்றுறுதிப்பத்திரமாக’’சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்த கடிதத்தின் மூலம் அவதானிக்கப்பட்டிருந்தது.

ii. 2013 யூலை மாதத்தில் சதொச தலைமை அலுவலக கட்டிடத்தின் 7 வது மாடியில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தினால் தலைவரின் அலுவலகம் மற்றும் நிதி முகாமையாளர் அலுவலகமும் தீவிபத்து ஏற்பட்டதால் கடிதத்தின் மூலப்பிரதி கண்டுபிடிக்க முடியவில்லை என்பதை அறியத்தருகின்றேன்.

iii.பணிப்பாளர் சரபயின்தீர்மானத்தின் படி அவ் மூன்று அதிகாரிகளுக்கு (03) செலுத்த வேண்டிய சம்பள நிலுவைத் தொகை (01 பெப்ரவரி 2007 முதல் 30 ஆகஸ்ட் 2010 வரையிலான காலப்பகுதியல்) இன் ஒரு பகுதி 2011 ஆம் ஆண்டில் ரூபா.172,260 நிதி முகாமையாளருக்கும், ரூபா.157,410 பிரதி நிதி முகாமையாளருக்கும் வழங்கப்பட்டது.

iv.சம்பள நிலுவைத் தொகையை பெப்ரவரி 2018 இல் முன்னாள் நிதி முகாமையாளரால் மேலே குறிப்பிட்டுள்ள பணிப்பாளர் சபையின் இலக்கம் 2010/1753/34 இன் தீர்மானத்தின் படி செலுத்தப்பட்டிருந்ததுடன் தொடர்புடைய கொடுப்பனவு பற்றுச்சீட்டுகளுக்கு அவரினாலும் பிரதி முகாமையாளரினாலும்கையெழுத்திட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் காணப்பட்ட தலைவருக்கு அறிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| | | இக்கொடுப்பனவு சம்பந்தமான அங்கீகாரம் மற்றும் அனுமதியளித்த ஒரு அதிகாரி ஓய்வு பெற்றதுடன் மற்றைய அதிகாரி அக் கடமைகளை செய்யமாட்டார். | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலைகளினூடாக லங்கா சதொசவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வழங்கப்பட்ட போதிலும் கொள்கலன் நிறையில் 38,244 கிலோகிராம் நிறை கொண்ட அரிசியின் மொத்தப் பெறுமதி ரூபா 2,456,219 ஆகவும் மற்றும் உள்@ர் அரிசி வழங்கப்பட்ட போதிலும் கொள்கலன் நிறையில் 9,588 கிலோகிராம் நிறை கொண்ட அரிசியின் மொத்தப் பெறுமதி ரூபா 651,344 ஆகவும் கடன்களிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தினால் அவ்வாறான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொதி பைகளுடன் அரிசி வழங்கப்படுகிறது மற்றும் ஒரு பொதி பையின் சராசரி எடை 100 கிராம். ஆதன்படி, லங்கா சதொச மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படையில் தராசு அளவீடுகளில் ''கொள்கலன் நிறை'' குறைத்துள்ளது. இக் கணிப்பீடானது விற்கப்படும் அரிசியின் அளவை அடிப்படையாகக் கொண்டது. | உள்ளக்கட்டுப்பாட்டின் அமைப்பின் இவ்வாறான குறைத்துக்காட்டுதல் தொடர்பாக அதிகார பூர்வமான உத்தியோகத்தர் ஒருவரை தெரிவு செய்து அவருடைய அனுமதியின் ஊடாக செயற்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.9 கூட்டுத்தாபனத்தினால் நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் இறுதியில் நிறுவனங்கள் மற்றும் 22 நபர்களினால்கூட்டுத்தாபனத்திற்கு எதிராக ரூபா 17,060,177 பெறுமதியானது இழப்பீடு கோரி 27 வழக்குகள் தாக்கல் செய்யபட்டுள்ளது. மேலும், மீளாய்வாண்டில் ரூபா 847,372 பெறுமதியானது இழப்பீடுகள் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், மீளாய்வாண்டில் இவ் வழக்குகளுக்கான சட்டச்செலவினமாக ரூபா. 433,200 செலுத்தப்பட்டிருந்தது. | சட்டத்துறையின் அறிக்கையுடன் ஒப்பிடப்படுகின்றது. | |

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் 07 நிறுவனங்கள் மற்றும் 04 நபர்களுக்கு எதிராக ரூபா. 101,695,558 பெறுமதியானது கோரப்பட்டு 11 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றில் ரூபா 735,000 அறவிடப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வாண்டில் இவ் வழக்குகளுக்கான சட்ட செலவினமானது ரூபா 227,625 ஆனது ஏற்பட்டிருந்தன.

## 2.10 ஆளணி நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 319 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் சிரேஸ்ட மட்டத்தில் 21 பதவிகளுக்கும், இடைநிலை மட்டத்தில் 51 பதவிகளுக்கும் மற்றும் ஆரம்ப நிலை மட்டத்தில் 247 பதவிகளுமாக காணப்பட்டன. மேலும், 31 திசெம்பர் 2018 இற்கமைய 167 மிகை ஊழியர்களாகவும் மற்றும்32 பதவிகளுக்கு வெற்றிடங்களும் காணப்பட்டன. இவற்றில் 09 சிரேஸ்ட மட்ட பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தன. | ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகின்ற 13 சாரதிகள் மற்றும் 32 உதவிப் பணியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினை விட அதிகமாக காணப்பட்டிருந்தனர். எனவே, இவ் ஊழியர்கள் தொடர்பான தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் ஆலோசனைகள் கோரப்பட்டிருந்தன. | அங்கீரகரிக்கப்பட்ட ஆளணியினர்களுடன் வேலைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 கூட்டுத்தானச் சட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதியில் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இற்கமைய 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை கூட்டுத் தாபனத்தின் தூரநோக்கு மற்றும் குறிக்கோள் ஆகியவற்றை உள்ளடக்கி கூட்டிணைந்த் செயற்திட்டமானது தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இத் திட்டமானது சரியான நேரத்தில் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ள்ப்பட வேண்டும். |

## 3.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதியில் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இற்கமைய செயலாற்றல் செயற்திட்டமானது தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மனித வள அபிவிருத்தி திட்டம்,கடகை மீளத் திருப்பி செலுத்தம் திட்டம் மற்றும் உள்ளக்கணக்காய்வு திட்டம் ஆகியன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ள்ப்பட வேண்டும். |